For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

பக்கங்கள்; நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 30 திங்கட்கிழமை (13 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 197

தரைப் பந்தல், கதிரைகள், லைவர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்

மண்டைதீவிலிருந்து படையினர் மீண்டும் கொடூரம்

குருநகர் மீன்சந்தையில் கூடிய மக்கள் மத்தியில் ஷெல் வீழ்ந்து வெடித்தது! 2 பேர் உடல்சிதறிப் பலி!!

17 பேர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மண்டைதீவுப் பகுதியிலிருந்து ஸ்ரீலங்காப் படையினர் யாழ். நகர கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து நடத்தி வரும் கொடூரத் தாக்குதலில் நேற்று இருவர் உடல் சிதறிப் பலியாகினர்; மற்றும் 17 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 8, 30 மணியளவில் குருநகர் தொடர்மாடி குடியிருப்பு அருகே — மீன்சந்தையில் — நெரிசலாகக் கூடியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் மத்தியில் படையினர் ஏவிய ஷெல்கள் வீழ்ந்து வெடித்த போதே இந்த அனர்த்தங்கள் ஏற்பட்டன.

காலை வேளையில் தூர இடங்களில் இருந்து வந்து மீன் வாங்குவதற்காக அங்கு கூடியிருந்தவர்களும், மீன் வியாபாரிகளுமே இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

தொடர்மாடிக்கு அருகே செல்லும் வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகே வேலியோரம் மரம் ஒன்றில் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது.

படையினர் ஏவிய மூன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

குருநகர் தொடர்மாடி தற்காலிக மீன்சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமுற்ற 17 பொது மக்களின் விவரம் வருமாறு:-

★ கிறிஸ்தோ மானியல் (வயது 40) — சாம்ஸன் வீடமைப்புத் திட்டம், அரியாலை.

★ இம்மானுவேல் சிம்மிறாஸ் (வயது 68) — குருநகர்.

★ சின்னட்டியன் முருகேசு (வயது 52) — முதலி கோவிலடி, வட்டுக்கோட்டை.

★ அந்தோனிப்பிள்ளை சித்தாத்துரை (வயது 41) — கழுவடி, ஆனைக்கோட்டை.

★ இராயப்பு மரியநாயகம் (வயது 60) — குருநகர்.

★ சதாசிவம் இராசையா (வயது 48) — டேவிட் வீதி யாழ்ப்பாணம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேரில் சென்று பார்த்தார் பி.பி.ஸி. செய்தியாளர்

குருநகர் தொடர்மாடிப் பகுதியில் நேற்று ஷெல் தாக்குதலால் ஏற்பட்ட அவலங்களை, தற்போது யாழ் வந்திருக்கும் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆலியும் 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் ஜப்ஸல் சமாத்தும் நேரில் சென்று பார்வையிட்டனர். (உ-85)

கொழும்பு சென்றிருந்ததால்

வண. பிதா ஜெபநேசன் ஷெல்லுக்குத் தப்பினார்!

குருநகர் ஜூன் 13

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் மண்டைதீவு பகுதியில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ். மத்தியூஸ் வீதியிலுள்ள மனிதமுன்னேற்ற நடுநிலையம் பெரிதும் சேதமடைந்தது.

நிலைய இயக்குநர் வண. ஹென்றி ஜெபநேசன் அடிகளின் படுக்கை அறை மீது வீழ்ந்துவெடித்த ஷெல்லினால் படுக்கையறை பலத்த சேதமடைந்தது.

இயக்குநர் அன்றைய தினம் கொழும்புக்குச் சென்றதால் அவர் தப்பினார்.

அந்த அறைக்கு அருகில் இருந்த அறை ஒன்றின் உறங்கிக் கொண்டிருந்த ஒருவரும் காயம் ஏதுமின்றித் தப்பினார்.

மனித முன்னேற்ற நடுநிலையம் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமாக இயங்கிவருவது தெரிந்ததே.

(உ-17-51-162)

நசிந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நேற்றுக் காலை மண்டைதீவு முகாமில் இருந்து குருநகர் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவேளை கோட்டைப்பகுதில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மேலிருந்து கல் விழுந்ததால் அதற்குள் நசிந்து மரணமானார்.

கொக்குவில் கிழக்கு காளி கோயிலடியைச் சேர்ந்த பிரேமானந்த் (21வயது) என்பவரே உயிரிழந்தவராவார். (உ-3)

சிறிமாவுக்கு இன்று சிங்கப்பூரில் அறுவை சிகிச்சை

சிங்கப்பூர், ஜூன் 13

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா (வயது 78) இன்று திங்கள் சிங்கப்பூரில் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிமாவோ உடல்நிலை குன்றினால் கட்சியின் தலைவராக அவரது மகள் சந்திரிகா தேர்ந்தெடுக்கப்படுவார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (-எ)

பிரேமாவின் மகன் எம். பியாவார்

கொழும்பு, ஜூன் 13

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஒரே மகனான சஜித் பிரேமதாஸா ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. (உ-எ)

வளலாய், இடைக்காட்டில் ஹெலி, பொம்மர் தாக்குதல்

வல்வெட்டித்துறை, ஜூன் 13

பலாலி இராணுவத் தளத்தைச் சேர்ந்த படையினர் நேற்றுக் காலை 6 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் பலாலி கிழக்குப் பகுதியில் தாக்குதல்களை நடத்தினர்.

படையினரின் முன்னணி நிலைகளில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல், துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட—

ஹெலிக் கொப்டர் ஒன்றும் 'புக்காரா' விமானங்கள் இரண்டும் வானில் வட்டமிட்டபடி வளலாய், இடைக்காட்டுப் பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பலாலி கிழக்குப் பகுதியில் படையினர் முன்னேற முயன்றதாகவும்—

அதனையடுத்து அப்பகுதியில் கடும் மோதல் வெடித்ததாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

படையினரின் தாக்குதலில் அச்சுவேலி தெற்கு முத்துமாரியம்மன் கோவிலடிப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் இடம்பெயர்வு

வல்வெட்டித்துறை, ஜூன் 13

வளலாய், இடைக்காட்டுப் பகுதிகளில் நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல்களை அடுத்து அப்பகுதியைச்சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் இரவு தொடர்ந்த வேட்டுத் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்களையும்—

நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல்களையும் அடுத்து—

தம்பாளை, கதிரிப்பாய் வளலாய், அச்சுவேலி பகுதிகளைச் சேர்ந்த மக்களே இடம் பெயர்ந்தனர்.

இவர்களில் பெரும்பான்மையானோர் ஆவரங்கால் பகுதியில் வந்து தங்கி நின்றனர்.

நேற்று மாலை நிலைமை வழமைக்குத் திரும்பியதை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தத்தமது இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர்.

(உ-11-85-155)

மூச்சந்தி முரளி



மீன் வாங்கப் போனவையளும் பயங்கரவாதிகளாத் தெரிஞ்சிருக்கும்... ..!

பேராசிரியர் மறைவால் குடாநாடு சோகமயம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நேற்று முன்தினம் கொழும்பில் காலமான யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராசாவுக்கு குடாநாட்டில் நேற்று உருக்கமான அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். நகரப் பகுதியும், ஏனைய பிரதான சந்தைப் பகுதிகளும் அதனால் சோபை இழந்து காணப்பட்டன.

அரச செயலகங்கள் பொது நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. பேராசிரியரின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கும் பதாதைகளும் வைக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே சோக கீதமும் ஒலிபரப்பானது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை செயலகங்களிலும், போராளிகளின் முகாம்களிலும் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன. வீதிகள் எங்கும் தோரணங்கள் கட்டுவதில் மக்கள் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பேராசிரியருக்கு அஞ்சலி தெரிவிக்கும் பிரசுரங்கள் பொது நிறுவனங்கள் பலவற்றால் வெளியிடப்பட்டுள்ளன.

பேராசிரியரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை தனியார் கல்வி நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. இத

(4ஆம் பக்கம் பார்க்க)

இறுதிக் கிரியைகள் முடியும் வரை

யாழ்: பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் நடைபெறா

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி, யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் இன்று முதல் பேராசிரியரின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் தினம் வரை நடைபெறமாட்டா.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக் கழகத்தின் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும் என்றும் —

இன்று முதல் இறுதிக் கிரியை நடைபெறும் தினம் வரை பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்றும் —

இறுதிக் கிரியைகள் நடைபெறும் நாள் விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகவும் —

அதுவரை பல்கலைக் கழக அலுவலகங்களின் முக்கிய சேவைகளுக்கு மட்டுமே திறந்திருக்கும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (உ-3)

கறுப்புப்பட்டி அணிந்து கடமைக்குச் செல்க!

யாழ்ப்பாணம், ஜூன் 13

பேராசிரியர் துரைராசாவின் மறைவுக்கு துக்கம் தெரிவிக்கும் வகையில் கல்விக் கூடங்கள், பொதுஸ்தாபனங்கள், வர்த்தகஸ்தாபனங்கள், அரச திணைக்களங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோர் இன்று கறுப்புப்பட்டி அணிந்து கடமை செய்ய வேண்டும்.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

சகல இடங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்க விடுவதுடன் பேராசானின் இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறும் ஒன்றியம் கோரியுள்ளது.

பி.பி.ஸியில் அஞ்சலி நிகழ்ச்சி

பேராசிரியர் துரைராசாவின் மறைவை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஒன்றை பி. பி. ஸி. தமிழோசை நேற்று ஒலிபரப்பியது.

கொழும்பு 'வீரகேசரி'' ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன், பேராசிரியருடன் விரிவுரையாளராகப் பணியாற்றி இப்போது லண்டனில் உயிரியல் ஆராய்ச்சிப் பணி ஒன்றில் உயர் அதிகாரியாக கடமையாற்றும் திரு. க. கதிரவேலு சண்முகநாதன் ஆகியோரினதும் —

பேராசிரியர் துரைராசாவின் முன்னாள் மாணவரும், தற்போது லண்டனில் உயர் பதவி வகிக்கும் அதிகாரியுமான சிங்களவர் ஒருவரினதும் அஞ்சலி உரைகளை பி. பி ஸி ஒலிபரப்பியது.

சொத்தி உபாலிக்கு உதவிய பிரமுகர்கள்விவரம்விரைவில்

பொலீஸார் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

'பாதாள உலகத்' தலைவர் சொத்தி உபாலிக்கு ஆயுதங்கள், குண்டுகள், பணம் மற்றும் வாகனங்களை வழங்கி வந்த பிரமுகர்கள் சிலரின் பெயர்கள் விரைவில் வெளியிடப்படவிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பல கொள்ளைகள், கொலைகளை, இவர்கள் வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தியே சொத்தி உபாலி மற்றும் நபர்கள் கூட்டாக மேற்கொண்டனர் [illegible]

[illegible] சொத்தி உபாலிக்கு உதவியதாகக் கூறப்படும் இப்பிரமுகர்கள் இப்போது தலைமறைவாகி விட்டதாகவும் அவர்களை விசாரணைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இப்பிரமுகர்கள் தங்களின் எதிரிகளையும் முரண்பட்டவர்களையும் தாக்குவதற்கு சொத்தி உபாலி குழுவினரையும் பயன்படுத்தி வந்ததாகவும்—

கொடுக்கப்பட்ட 'பணியை' வெற்றிகரமாக முடித்த பின்னர் அவர்களுக்கு இப்பிரமுகர்கள் நல்ல சன்மானம் வழங்கினர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (எ)

கொழும்பில் நேற்று அஞ்சலி

நேற்று முன்தினம் காலமான பேராசிரியர் துரைராசாவின் புகழுடல் நேற்று கொழும்பில் திறந்த பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருந்திரளான மக்கள் பேராசிரியரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அவரது புகழுடல் இன்று காலை 9-30 மணிக்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா — தாண்டிக்குளம், ஊரி ஊடாகவே பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியரின் புகழுடல் இன்றிரவு யாழ். வந்து சேரும்

பேராசிரியர் துரைராசாவின் புகழுடல் இன்று இரவு 9 மணி அளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து நேற்றிரவு இங்கு கிடைத்த செய்திகளின்படி புகழுடல் இன்றிரவு 9 மணியளவில் யாழ்நகர் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

புகழுடல் வந்து சேர்ந்ததும் அது உடனடியாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை காலைவரை அஞ்சலி

இன்றிரவு 9 மணியளவில் யாழ். பல்கலைக் கழகத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் பேராசிரியர் துரைராசாவின் புகழுடல் இன்று இரவு முதல் நாளை காலை 10 மணி வரை அங்கு கைலாசபதி அரங்கில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதன் பின் அன்று நண்பகல் யாழ் பல்கலைக் கழகத்தில் அஞ்சலி உரைகள் இடம்பெறும்.

தொடர்ந்து நாளை பிற்பகலில் பேராசிரியரின் புகழுடல் அவரது சொந்த இடமான வதிரிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

புதனன்று இறுதிக்கிரியைகள் அன்று முழு கடையடைப்பு

மறைந்த பேராசிரியர் துரைராசாவின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை அவரது சொந்த இடமான வதிரியில் இடம்பெறும்.

அதனை ஒட்டி இன்றும் நாளையும் நாளை மறுதினமும் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும்.

இறுதிக்கிரியைகள் நடைபெறும் நாளை மறுதினம் முழு கடையடைப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவை இயங்கா.

பல்வேறு இரங்கற் செய்திகள் நேற்று வெளியிடப்பட்டன

மறைந்த பேராசிரியர் துரைராசாவுக்கு அஞ்சலி செலுத்தியும் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்தும் பல்வேறு செய்திகள் நேற்று வெளியாகின.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் ஆகியோராலும் —

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை, வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை ஆகியன உட்பட மற்றும் பல பொது அமைப்புகளாலும் —

இரங்கற் செய்திகள் விடுக்கப்பட்டுள்ளன.

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஓர் ஆண்டு பூர்த்தியாகிய பொமனேரியன் ஆண் நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. நேரில் வரவும். சங்கரப்பிள்ளை, இல. 809, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31838)

அடை வைக்க உகந்த பிரமா, சில்கி, பாமாலி, கில்லர்சிப் பிறைம், போலிஸ் ஸ்டைல், பிறேஹில் ஸ்பங்கிளர் கோழி முட்டைகளும், கினி கோழி முட்டைகளும் உடன் விற்பனைக்குண்டு. இல. 684, நாவலர் வீதி (நாவாந்துறை வீதி), குமரன் படிப்பகத்திற்கு அண்மையில், ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (31381)

இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆஷா கோழிப் பண்ணை, 1ஆம் கட்டை, பருத்தித்துறை. (31849)

வெளிவந்துவிட்டது

பா. தனபாலவின் "அறிவியல் சிந்தனை அலைகள்" வியப்பூட்டும் விஞ்ஞான. இயற்கை நவீன சமூகப் பாதையை எடுத்தியம்பும் சிறந்த நூல். மாணவர்கள், வாசகர்கள் தேடி வாங்க வேண்டியது! பூபாலசிங்கம், தமிழ்த்தாய், ஸ்ரீலங்கா புத்தகசாலைகளிலும், இலங்கையின் முன்னணி புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (31864)

புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். (7445)

நாகபூசணி படம்

நயினை நாகபூசணி அம்மன் படம் பிறேம் போட்டபடி விலை 150/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8272)

தேவை

புடவை வியாபாரம் பில் போட்டு விற்பனை செய்யக் கூடிய பெண்பிள்ளை ஒன்று தேவை. நேரில் சமுகம் தரவும். சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், இல. 21, மக்கள் நவீன சந்தை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (31337)

புதிய வகுப்புகள்

Yogi Home Science Academy 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர், யாழ்ப்பாணம். (31359)

கம்பியூட்டர் செய்முறை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் "உயர் வணிகத்தகுதித் தேர்வுப்பயிற்சி" நெறிக்கு கம்பியூட்டர்கள் செய்முறைப் பயிற்சி வகுப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் உப-அதிபர் திரு எம். விக்கினேஸ்வரன் கம்பியூட்டரை இயக்கி பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். (இ-8)

பிரேமாவை புகழ்கிறார் ரணில்

கொழும்பு ஜுலை 13

இலங்கையின் வரலாற்று நிகழ்வுகள் பதிவு செய்யப்படும்போது மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

தெரணியகலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போது அவர் முன்கண்டவாறு தெரிவித்தார் (இ-7)

கீரிமலையில்

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்

நிகழும் பவ வருஷம் வைகாசி மாதம் 30ஆம் திகதி (13 – 06 – 1994) திங்கட்கிழமை இன்று பகல் விநாயகப் பெருமானுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் சங்காபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மாலை சுப்பிரமணியர் திருக்கல்யாணம் நடைபெறும். இவ் விழாவில் தமிழ்முத்தின் பிரபல நாதஸ்வர தவில் கலைஞர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

கொஞ்சிற் கச்சேரி

திரு. V. K. பஞ்சமூர்த்தி — நாதஸ்வரம்
திரு. V. R. ராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. K. கண்ணதாஸன் — மிருதங்கம்
திரு. P. கணேசன் — தவில்
திரு. S. வேல்மாறன் — கடம்
திரு. K. மயூரன் — தபேலா
திரு. S. ராஜு — மோர்சிங்

பக்திகானங்கள்

பிரபல பாடகர் S G. சாந்தன் குழுவினர்

இங்ஙனம்:
பூங்காவனத் திருவிழா உபயகாரர்கள்.

[31368]

பொருளியல்

(94 A/L பரீட்சார்த்திகளுக்கு)

சிறு குறிப்புகள்

(10க்கும் மேற்பட்டவை)

விலை 10 ரூபா மட்டுமே

ஆக்கம்:
பொருளியல் **K. உதயன்** B.B.A. (Spl.)

கிடைக்குமிடம்:
கலை, வர்த்தகக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: சொற்ப பிரதிகளே உண்டு.

[சி 8274]

நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

- நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
- நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
- நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
- நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் (16-06-94) அல்லது வெள்ளி (17 - 06 - 94) காலை 10 மணிக்கு கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல, 10, செம்பியன் வீதி,
கொக்குவில்.

[சி-8448]

3ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 04 — 1907

மறைவு: 17 — 05 — 1991

அமரர் கந்தசாமி ஞானசுந்தரம்

திதி: 13 – 06 – 1994

இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

– குடும்பத்தினர்.

461, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கலாலயாவின்

மனைப்பொருளியலும், கைத்திறனும் பொருட்காட்சி

- உள்ளூர் உணவுகள்
- தைத்த ஆடைகள்
- கைப்பணிகள்
- செயற்கை மலர்கள்
- கேக் அலங்காரம்

காலம்: ஜுன் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில்
நேரம்: காலை 10 – மாலை 6 வரை
இடம்: விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்

[சி-8457]

DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

திங்கள், புதன் 8-30 — 10-30

ஆரம்பம்: 15-06-1994
மணி 8-30

FEES மாதம் **400/-**

LOTUS 1-2-3

(With MACRO)

சனி, ஞாயிறு 2-30 — 4-00

ஆரம்பம்: 18-06-1994
மணி 2-30

FEES மாதம் **1000/-**

LECTURES BY:
S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (London)

C.I.M.A. I.A.B SHORT-HAND & TYPING

நடைபெறுகின்றன

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd, CROSS STREET,
JAFFNA.

[C-8459]

5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 29 — 05 — 1968

விண்ணில்: 13 — 06 — 1989

செல்வன்

கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன்

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஒரு நாளேனும் மறக்கவில்லை உன் நினைவை–
ஆறாய்
பெருகும் கண்ணீர் காயவில்லை – எமது
துயரம் இன்னும் தீரவில்லை – உன்
அன்பு முகம் காணாது வாடுகிறோம்
இப் புவியில் நாம் வாழும் வரை - உன்
நினைவுகளும் மறையப் போவதில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

– குடும்பத்தினர்,

நீர்வேலி. (7435)

கண்ணீர் அஞ்சலி

தன்னலம் பாராது கல்விக்காக
தன்னை அர்ப்பணித்த

பேராசிரியர் அ. துரைராசா

(முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்)
அவர்களின்

மரணச் செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கி நிற்கின்றோம். அவரது ஆன்ம சாந்திக்காகவும் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

[31382]

யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

முக்கிய அறிவித்தல்

இம் மாதம் 6ஆம் திகதி காலை இறைபதம் எய்திய யாழ். கேணல் கிட்டுசாலை (மருத்துவ மனை வீதி) யில் அமைந்துள்ள

கொ. க. 2ம் கந்தையாப்பிள்ளை

வணிக நிலைய உரிமையாளரும்,
முன்னாள் வணிகர் கழகத் தலைவருமான

க. நடராசா

அவர்களின்

ஈமைக்கிரியைகள் இன்று (13-06-1994) திங்கட்கிழமை 10மணிக்கு நடைபெறவுள்ளதால் வணிகப் பெருமக்கள் மற்றும் அனைவரும் அன்னாருக்கு இறுதி அஞ்சலியை தெரிவிக்கும் வண்ணம் அன்று யாழ். நகரிலுள்ள சகல வணிக நிலையங்களும் மூடப்பட்டிருக்குமென தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்,
யாழ் வணிகர் கழகம்.

[சி-8460]

கலாநிதி துரைராசா

அவர்களுக்கு

எமது இதய அஞ்சலி

அன்னாரின் பிரிவால் ஏங்கி தவிக்கும்
அவரின் குடும்பத்தினருக்கும் உளம் நெகிழ்
கண்ணீர் அஞ்சலிகள்

வடபிராந்திய யாழ். ஆங்கில வணிக மன்றம்

மருந்தாளர் பயிற்சி நெறி மாணவர்கள்

[சி-8458]

கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர்

அழகையர் துரைராசா

எம் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியையும்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், ஊழியர்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
உடுப்பிட்டி. (31388)

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முன்னாள் உபவேந்தர்
பேராசிரியர்

அ. துரைராசா அவர்களுக்கு

எமது அஞ்சலியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

தமிழ்ச் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

முக்கிய குறிப்பு:
13-06-94 (இன்று) திங்கட்கிழமை எமது கல்லூரியில் நடைபெறவிருந்த தமிழ்விழா எதிர்வரும் 20-06-94 திங்கட்கிழமை குறித்த நேரத்தில் நடைபெறும்.

(சி-8462)

அமரர் பேராசிரியர் அ. துரைராசா

அவர்கட்கு

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

மாணவருலகம் பேராசானை இழந்தது!
எம் சமூகம் ஜோலி வேடமில்லா
உண்மை மனிதனை இழந்தது!
தமிழீழம் ஓர் நல் வழிகாட்டியை இழந்தது!

ஐயா!

நீங்கள் எம்மிடம் காட்டிய பண்பிற்காக, நீதிக்காக, தந்த துணிவிற்காக, ஊக்கத்திற்காக, இறுதியாக எமது நன்றிகள், உங்களின் ஆத்ம சாந்திக்காக நாம் என்றென்றும் பிரார்த்திப்போம்.

நிர்வாகிகள், ஆசிரியர்கள்,
உத்தியோகஸ்தர்கள்.

NEW SCIENCE ACADEMY NEW SCIENCE HALL

மாணவர்களுக்கான விசேட அறிவித்தல்

- ★ மறைந்த பேராசானுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக திங்கள், செவ்வாய் நடைபெறவுள்ள சகல வகுப்புகளும் பரீட்சைகளும் ரத்துச் செய்யப்படுகின்றன.
- ★ தாவரவியல் போட்டிப் பரீட்சை — இல. 5 — இற்குரிய A, E, F, P, Q, R, S ஆகிய குழுக்களுக்கான கலந்துரையாடல் வகுப்புக்கள் எதிர்வரும் வியாழன் 11மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

[சி-8461]

உதயன்
192/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

தொடரும் இனப்படுகொலை

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினர் நேற்று ஞாயிறு காலை குருநகர் மீன்சந்தைப் பகுதியில் நடத்திய ஷெல்தாக்குதலின் போது அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

கடந்த இரு தினங்களில் குருநகர் குடிமக்கள் வாழும் பகுதியில் நடத்தப்பட்ட மூன்றாவது ஷெல் தாக்குதல் இதுவாகும்.

சனிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டனர். ஆறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதற்கு முன்னர் சங்கானை நிச்சாமம் பகுதி அகதிமுகாம் ஒன்றின் மீதும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் அகதி ஒருவர் பலியானார்.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள் விமானத் தாக்குதல்களினாலும், ஷெல் தாக்குதல்களினாலும், கடற்படையினரின் நாசகார பீரங்கித் தாக்குதல்களினாலும் கொல்லப்படுவது சகஜமாகி வருகிறது.

குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை இனம் கண்டு தாக்குதல் நடத்தி பொதுமக்களை அழிப்பதே படையினரின் நோக்கம் என்பதில் சந்தேகம் இல்லை.

அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் படையினரின் இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது ஆகும். இலங்கையில் உள்ள மனித உரிமை பேணும் நிறுவனங்கள் இதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். மக்கள் கொல்லப்படுவதும் ஊனமாக்கப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் மூண்டு தற்போது நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன.

இந்த நான்கு ஆண்டுகளிலும் படையினரின் விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், கடற்படைப் பீரங்கித் தாக்குதல்கள், துப்பாக்கி வேட்டுக்கள் மற்றும் இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் அவயவங்களை இழந்துள்ளனர். எதிர்காலச் சந்ததிக்கு அவர்கள் சுமையாக இருக்கப்போகிறார்கள்.

இவ்வளவு அழிவுகளுக்கு மத்தியிலும் அரசு சமாதானப் பேச்சுக்களை நடத்தாமல் இழுத்தடிக்கிறது.

வெளிநாடுகளின் சமாதான முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு வருகிறது. பெரும்படை எடுப்புக்கான யுத்த ஆயத்தங்களைச் செய்து வருகிறது.

இன அழிப்பில் தனது இலக்கை இன்னும் அடையவில்லை என்று அரசு கருதுகிறதா? இன அழிப்பு மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று அரசு எண்ணுகிறது போல் தெரிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக்கரை நகரான ஹெப்ரோன் பள்ளிவாசலில் 50க்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் யூதக்குடியிருப்பு வாசி ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்போது முழு உலகமுமே அதற்கு எதிராகக் குரல் கொடுத்தது.

அதே போன்று வியட்நாம் யுத்த காலத்தில் இடம்பெற்ற மைலாய் படுகொலைகள் முழு உலகின் முன் அமெரிக்காவைத் தலைகுனிய வைத்தன.

ஆனால் ஸ்ரீலங்காவில் எத்தனையோ ஹெப்ரோன், மைலாய் சம்பவங்கள் இடம்பெற்று விட்டன. குரல் கொடுக்க எவரும் இல்லை. ஸ்ரீலங்கா தலைகுனியும் நிலையிலும் இல்லை.

ஆகவே இன்றைய நிலையில் எமக்கு ஒரு தாயகம் வேண்டும். அதனை அடைவது மூலமே இனப்படுகொலையில் இருந்து நாம் எம்மை முற்றாக விடுவித்துக் கொள்ள முடியும்.

ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் இனப்படுகொலைகள் எமக்கு இந்தப் பாடத்தைத்தான் புகட்டி வருகின்றன. அதன்படி செயற்படுவதுதான் எமக்கு ஒரே வழி.

இலங்கை இனப்பிரச்சினை;

மத்தியஸ்தம் வகிப்பதற்கு நோர்வே அரசு தீவிரம்!

யாழ்ப்பாணம், ஜூன் 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் தாம் மேற்கொள்ளவிருக்கும் மத்தியஸ்த முயற்சிக்கு இலங்கை அரசை இணங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் நோர்வே அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் நட்புநாடுகள் எனக் கருதப்படும் சில மேற்கு நாடுகள் மூலம் கொழும்பு அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும் முயற்சிகளில் நோர்வே அரசு ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசின் மத்தியஸ்த முயற்சியை இலங்கை இன்னும் ஏற்காத நிலையில் தொடர்ந்தே, அந்த நாட்டு அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசு மேற்குலக நாடுகளுடன் இது தொடர்பான பேச்சுக்களை நடத்தி வருவதாக றெட்பானா அமைப்பின் தலைமைத் திட்ட அதிகாரியான திரு. மாரீகுஸ் அக்ஸ்லாண்ட் தெரிவித்தார்.

ராஜதந்திரியுமான அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:

நோர்வே ஒரு நடுநிலை நாடு. பல நாடுகளில் இடம்பெற்று வந்த உள்நாட்டுப் போர்களுக்கு தமது மத்தியஸ்த முயற்சி மூலம் நோர்வே தீர்வு கண்டது.

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு முடிவு காண உதவுமாறு உலகின் பல நாடுகள் மற்றும் அமைப்புகள் நோர்வே அரசுக்கு விண்ணப்பித்தன. அதனைத் தொடர்ந்தே நோர்வே அரசு இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்ய முன் வந்தது.

நோர்வேயின் முயற்சியை இலங்கை அரசு ஏற்றதாகத் தெரிவிக்கவில்லை. வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லை என்று இலங்கை அரசு கூறிவருகிறது எனினும் நோர்வே அரசின் கோரிக்கையை இலங்கை அரசு இன்னும் நிராகரிக்கவில்லை.

மத்தியஸ்த முயற்சியில் நோர்வே அரசு இன்னும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே இலங்கையுடன் நட்புக்கொண்ட நாடுகள் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் நோர்வே அரசு ஈடுபட்டுள்ளது— இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ-3)

அடையாள அட்டைகள் தாமதமின்றி கிடைக்கும்

புதிய திட்டம் செயற்படுத்தப்படுமாம்

கொழும்பு, ஜூன் 13

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு துரிதமாக அடையாள அட்டை வழங்க புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இதன்படி—

யாழ். மாவட்டத்தில் உள்ளோருக்காக 12 ஆயிரம் அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் யாழ். அரச அதிபருக்கு 60 ஆயிரம் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

சாவகச்சேரி பாடசாலை திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் கட்டடம் புதுப்பித்தல், தளபாடங்கள் கூரை ஓடுகள் ஆகியவற்றுக்காக 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. நவரத்தினத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் விளையாட்டு உபகரணங்களுக்காக 50 ஆயிரம் ரூபாவையும் அவர் ஒதுக்கீடு செய்துள்ளார். [எ]

முல்லைத்தீவு, அம்பாறையில் இராணுவ நடவடிக்கை

முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் படையினரின் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாக கூட்டுப்படை செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்துள்ளது.

படையினர் தரைமார்க்கமாகவும், விமானப்படையினர் வான் மார்க்கமாகவும் தாக்குதல்களை தொடர்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

காமினியின் வழியில் பிரேமச்சந்திராவும்

ஐ.தே.க-வில் இணையலாம்

கொழும்பு, ஜூன் 13

தென்மாகாண சபையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நடந்து கொள்ளும் விதம் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகவும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐ. தே. கவுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதே இதற்கு மாற்றுவழி என்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா சனியன்று பி. பி. ஸி சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார்.

பிரேமரத்தின குணசேகராவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியது தொடர்பாக முதலமைச்சர் சந்திரிகா மீது அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டு வரப்பட இருப்பதாகவும் மேல் மாகாணசபையில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் 17 உறுப்பினர்களும் இதனை ஆதரிக்க வேண்டும் என்றும் பிரேமச்சந்திரா கேட்டுக் கொண்டார்.

இதனை ஆதரிக்காத கட்சி உறுப்பினர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (இ-6)

விடுதலைப் போருக்கு

காத்திரமான பங்களிப்பை வழங்கிய நாட்டுப் பற்றாளர்!

கலைஞர் நித்திக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 13

விடுதலைப் போருக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்த நாட்டுப் பற்றாளர் என்று எமது தேசியத் தலைவரால் பாராட்டப்பட்டவர் கலைஞர் நித்தி அண்ணா.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நேற்று முன்தினம் தமிழீழக் கலைஞர்கள் இணைந்து நடத்திய நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

இளங்கலைஞர் மன்றத் தலைவர் சங்கீத பூஷணம் திரு. பொன். சுந்தரலிங்கம் தலைமை வகித்தார்.

"அவரை இந்த நாட்டின் சொத்தாக நாங்கள் கருதினோம். ஓய்வில்லாத உழைப்பாளி அவர். எதற்குமே கலங்காத போராளிகள் கூட அவரின் மறைவுக்கு கண் கலங்கினார்கள்" என்றும் அவர் தெரிவித்தார்.

கலைஞர் நித்தியின் மறைவு தொழில்நுட்பத்துறை மற்றும் கலைத்துறைக்கு மட்டுமன்றி, மனிதநேயத்துக்கும் ஒரு பேரிழப்பாகும் என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

சிறந்த தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு கலைகளின் [illegible] சக்தியாக விளங்கியவர் நித்தி அண்ணா என [illegible] சுந்தரலிங்கம் தனது தலைமை உரையில் தெரிவித்தார்.

மண்ணுக்குத் தொண்டு செய்த கலைஞர்கள் என்றும் சாவதில்லை என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், வண. பிதா யோசப் அடிகளார் உட்பட கலைத்துறை சார்ந்த பலரும் பேசினர். இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோரின் கவிதாஞ்சலியும் எஸ். கே. பத்மநாதன் குழுவினரின் நாதாஞ்சலியும் இடம்பெற்றன.

திரு. பொ. புலவர், திரு. [illegible] நினைவுச் சுடர் ஏற்றினார். (எ-111)

அரசை தோற்கடித்தாலேயே யுத்தம் முடிவுக்கு வரும்

நாடாளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி எம். பி.

கொழும்பு, ஜூன் 13

இன்று முழு யுத்தமும் ஒரு மோசடியாகி விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் அடிவருடிகள் நிறைய 'கமிஷன்' பெறுகிறார்கள். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றால் இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

சுதந்திரக்கட்சி எம். பி. சி. வி. குணரத்னா நாடாளுமன்றத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தேர்தல் கால நிவாரணமாக 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அலவன்ஸ் கொடுக்க அரசு எண்ணியுள்ளது.

இறந்தவர்களுக்கு வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் வழங்க அரசு முடிவு செய்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

787கான்ஸ்டபிள் பதவி உயர்வு

20 வருட சேவைகளைப் பூர்த்தி செய்த 787 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சார்ஜண்டுகளாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சார்ஜண்ட் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. (எ)

புலிகளின் குரல் வானொலியில்

13 - 06 - 1994
திங்கள் இரவு
★ 8-01 — தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — செய்திச்சரம்
★ 8 - 30 — செய்திகள்
★ 8-40 — இலக்கியம் - அரசகரும மொழியாக்கப்பட்டதன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "பிரிவினைக்கு தூண்டியவர்"

14 - 06 - 1994
செவ்வாய் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்.

றுவாண்டாவில் பயங்கரம்:

ஆலயத்தில் தஞ்சம் புகுந்த 170 அகதிகள் சுட்டுக்கொலை

றுவாண்டாவின் நியாமிரம்போ என்ற நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் தங்கியிருந்த 170 ருட்சி இன அகதிகள் அரச சார்புப் போராளிகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு இடம்மாற்றுவதாகக் கூறிக்கொண்டு டிரக் வாகனங்களில் இவர்களை அரச சார்பு போராளிகள் ஏற்றிச் சென்றனர் என்றும் —

பின்னர் இவர்களின் சடலங்கள் டிரக்குகளில் குவியலாகக் காணப்பட்டன என்றும் ஜேர்மன், பிரெஞ்சு மத குருமார்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது

5 காங். உறுப்பினர் கட்சியிலிருந்து நீக்கம்

தமிழக சட்டசபையில் அங்கம் வகிக்கும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களில் ஐவரை, காங்கிரஸ் தலைமைப்பீடம் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேற்றியது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர்கள் மீது காங்கிரஸ் தலைமைப்பீடம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இது தொடர்பாக அவர்கள் அளித்த விளக்கம் திருப்திகரமாக இருக்கவில்லை என்று கூறி முன்கண்ட நடவடிக்கையை காங்கிரஸ் தலைமைப்பீடம் எடுத்தது

ஏற்கனவே கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக செல்வராஜ் என்ற எம். எல். ஏ. கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்

இவர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 61இல் இருந்து 56 ஆகக் குறைந்துள்ளது

குணசேகராவின் இடம் யாருக்கு?

லலித் அணியினர் மத்தியில் பிளவு

கொழும்பு, ஜூன் 13

பதவி விலக்கப்பட்ட பிரேமரத்ன குணசேகராவின் இடத்துக்கு யாரை அமைச்சராக நியமிப்பது என்பதில் மேல் மாகாணசபையில் உள்ள லலித் அணியினரான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண அமைச்சராக லலித் அணியைச் சேர்ந்த எதிர்வீர பிரேமரத்தினாவை நியமிக்க முதலமைச்சர் சந்திரிகா முயற்சித்து வருகிறார்.

இதற்கு லலித் அணியில் உள்ள இன்னொரு பிரிவு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது (இ-எ 6)

புதிதாக பணநோட்டுகள் அச்சிடப்படமாட்டா!

அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 13

அரசாங்கம் புதிதாக ஆயிரத்து 100 கோடி ரூபா பெறுமதியான பணநோட்டுக்களை அச்சிடப்போவதில்லை. பாதுகாப்பு வரியை 3½ சத விகிதத்தில் இருந்து 7 சதவிதமாக அரசு அதிகரிக்காது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தேர்தல் கால நிவாரணங்களை வழங்குவதற்கு தேவையான ஆயிரத்து 100 கோடி ரூபாவுக்கு பணநோட்டுக்களை அச்சிட அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன இது உண்மையா என்று சுதந்திரக் கட்சி எம். பி. ஆனந்த தஸநாயக்கா வினா ஒன்றை எழுப்பியிருந்தார்

தேவையான பணத்தை, பணவீக்கத்தை ஏற்படுத்தாத முறையிலேயே அரசு திரட்டும் என்றும் அவர் சொன்னார். (எ)

ஐக்கிய தேசியக் கட்சியில்

பதவிகளை 'கவர்ந்து' விடும் முயற்சியில் புதிய முகங்கள்!

கொழும்பு, ஜூன் 13

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிதாக சேர்ந்துள்ளவர்கள் தங்களுக்கு விருப்பமான அமைச்சுக்களையும் மற்றும் கட்சியின் நிர்வாகப் பதவிகளையும் 'கவர்ந்து' கொள்ளும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் ஒருவர் கண்டி மாவட்டத்தில் உள்ள தேர்தல் தொகுதி ஒன்றின் பிரதம அமைப்பாளர் பதவியைத் தர வேண்டும் என்று கோரிவருகிறாராம். இப்பதவியில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தற்போது உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சரவை தற்போது அவர் பணி புரியும் அமைச்சில் இருந்து மாற்ற வேண்டும் என்றும் இவர்கள் ஐ.தே.க. தலைமையை வற்புறுத்தி வருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

புதியவர்களில் சிலர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் நியமனம் பெறவும் முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதியவர்கள் முன்னர் கட்சியை விட்டு வெளியேறிய போது, கட்சியில் தொடர்ந்து இருந்து வரும் உறுப்பினர்களும் அதிகாரிகளும், புதியவர்களின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராட்டக் களம் கட்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

தங்கநகை மாடிமனை தேடாதே!
நீ மாலையிட சீதனத்தைக் கேளாதே!

ஆலயங்களில்

தொல்புரம் வடக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. உற்சவத்தையொட்டி இன்று மாலை 6 மணிக்கு "பார்வதி கல்யாணம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் இசைச் சொற்பொழிவு இடம்பெறும். (எ-5)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ [illegible] பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய் காலை 9மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (எ-5-152)

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவை பிள்ளையார் கோயில் மஹோற்சவம் நாளை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும (எ-5-153

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

திருவிழாக் காலத்தில் தினமும் இரவு 7.45 மணிக்கு 'மகாபாரதம்' பற்றி காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு த சிவகுமாரன் தொடர் சொற்பொழிவாற்றுவார் (எ-69)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் ஸ்ரீ அம்மன் கோயில் மஹோற்சவம் நாளை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் (உ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணல்பம்பதி ஸ்ரீ வைரவர் ஐயனார் கோயிலில் இன்று காலை 9. மணிக்கு புதிய வைரவர் ஆலயத்தை அமைப்பதற்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் இடம் பெறும் (உ-5-30)

★ ★ ★

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய் நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் (உ-5-30)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காடுமலைக் கந்தசாமி கோயில் மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறும். (உ-5-11)

இன்று

பருத்தித்துறை கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திக்கம் ஹாட்லிக் கல்லூரி வசந்த அரங்கில் நடைபெறவுள்ளன. பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வேதி செல்வரத்னம் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும் (-5)

இரசாயன பொருள் இருந்த கட்டடமே தீப்பிடித்தது

கல்விச்சேவைகள் அமைச்சின் நாரஹேன்பிட்டி களஞ்சியப் பகுதியில் கடந்த வியாழன் இடம்பெற்ற தீ விபத்தில் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

களஞ்சியத்தில் இரசாயனப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கட்டடமே தீப்பிடித்தது (இ-6)

நாய்களுக்கு நோய் தடுப்பூசி

யாழ் மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த்தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகிறது.

இன்று திங்கட்கிழமை தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:

★ காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை— பொன்னம்பலம் வீதி கலைவாணி சனசமூகநிலையம், அரியாலை கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம்

★ காலை 10 - 30 மணி தொடக்கம் பிற்பகல் 12 - 30 மணிவரை— அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், புங்கன்குளம் வீதி அரியாலை சனசமூக நிலையம்!

★ பிற்பகல் 2 - மணி தொடக்கம் மாலை 4 மணிவரை— நல்லூர் செங்குந்த சந்தை முத்தவிநாயகர் சனசமூக நிலையம். (இ-17)

முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

யாழ். மாவட்ட தலைவர், பொருளாளர் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள் யாழ். கோட்டம், வடமராட்சிக் கோட்டம், தென்மராட்சிக் கோட்டம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர், பொருளாளர், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களையும் நல்லூர் தமிழ் கல்வி மேம்பாட்டுக் கழகத்தில் இன்று 13-06-94 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்

(இ-8463)

மரண அறிவித்தல்கள்

ஆ. க, நடராசா (K.K. A. K.)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வைமன் வீதியில் வசித்தவரும் யாழ்ப்பாணம் இட்டுசாலை (மருத்துவமனை வீதி) இல; 316, கொ. க. ஆ. கந்தையாபிள்ளை வணிக நிலைய உரிமையாளரும், முன்னாள் யாழ். வணிகர் கழகத் தலைவரும் ஆகிய ஆ. க. நடராசா அவர்கள் 6-06-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரபல வணிகர் கொ.க.ஆ.கந்தையாபிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஞானகலையின் அன்புக் கணவரும், திலகவதி (கனடா), தங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசோதியின் (கனடா) மாமனாரும், ஐதுஷன் (கனடா) வரோணிகா (கனடா) ஆகியோரின் அன்பு பேரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற பரமசிவம்பிள்ளை (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமியின் (ஜே. பி.) மைத்துனரும் காலஞ்சென்ற இராசலிங்கம், பரிபூரணம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 13-06-94 காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கேஸ்வரன்
(மகன்)

இல. 26, வைமன் வீதி,
(ஈழநாதம் முன்பாக),
நல்லூர், யாழ்ப்பாணம்.

(31383)

திருமதி கதிரமலை சௌந்தரம்

காரைநகர் மணற்காட்டை வதிவிடமாக கொண்ட திருமதி கதிரமலை சௌந்தரம் 11-6-94 அன்று செங்கலடியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் கதிரமலையின் மனைவியும், முருகர் அம்பலத்தின் சகோதரியும், கந்தசாமி(கிராம உத்தியோகத்தர் வலி வடக்கு), நாகேந்திரம் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் செங்கலடி), ஜெகதீசன் (கிராம உத்தியோகத்தர் சங்கானை கிழக்கு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை (மருந்தாளர் யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயலட்சுமி, விமலாதேவி (ஆசிரியை காரை / தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 12-6-94 அன்று செங்கலடியில் நடைபெற்றது என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
க. கந்தசாமி
க. ஜெகதீசன்
(மகன்மார்)

41, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(31386)

கிட்டிணசாமி ஆனந்தகணேசன்

(இளைப்பாறிய D.O A:, நிலஅளவைப் பகுதி)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாச்சிமார் கோவிலடி வாசியுமாகிய கிட்டிணசாமி ஆனந்தகணேசன் வரணியில் 11-06-1994 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசகோபால், நித்தியானந்ததேவி, ஜெயகலாதேவி, விஜயகோபால் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபூபதி, யோகரட்ணம், இரட்ணதுரை, சந்திரா ஆகியோரின் மாமனும், திருமதி பஞ்சாட்சரம் பாக்கியலட்சுமி, சண்முகசுந்தரம், காலஞ்சென்ற [illegible]ந்தசுந்தரம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், ஆகியோரின் சகோதரரும், கோபாலகிருஷ்ணரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஜெயசேகரசிங்கம்
(காந்தி)

தபாற்கந்தோரடி,
பிரதான வீதி,
வரணி.

(31379)

திருமதி
சிவக்கொழுந்து விவேகானந்தன்

வரியப்புலத்தைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து விவேகானந்தன் நேற்று 12-06-94 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வியும், திரு விவேகானந்தனின் (ஓய்வுபெற்ற காசாளர் வர்த்தக வங்கி யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், நிருஷன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர்தர மாணவன்), உதர்ஸ்மன் (கொக்குவில் இந்துக் கல்லூரி 9 C மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவபாலன் (கணக்காளர்), சிவபாலன் (கணக்காளர்), குமாரபாலன் (கணக்காளர்), சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ஜெயந்தி, புஷ்பமாலா, சுவேதினி, குகனேசன் (பொது முகாமையாளர் P. D. B — ஆய்வாளர் த. பொ. மே. நி.), சரஸ்வதிதேவி - சிதம்பரப்பிள்ளை, கமலாதேவி - குணசிங்கம், சரோஜினிதேவி - சிவபாதசுந்தரம் யோகராஜா (சவுதி அரேபியா), இராஜேஸ்வரி, சகுந்தலாதேவி - திருச்செல்வம், இராஜலட்சுமிதேவி-தர்மராஜா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பொ. விவேகானந்தன்
(கணவர்)

வரியப்புலம்,
சுன்னாகம்.

(31384)

அதிபர்கள் சேவைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 13

கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை அதிபர்கள் சேவையின் முதலாந்தர, இரண்டாம் தர மூன்றாந்தரப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையை கல்விச் சேவைகள் சபை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடத்தவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்பும் கடைசித் தினம் ஜூலை மாதம் 8 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அரசாங்க அறிவித்தலை யாழ். மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையில் உள்ள உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் (உ-எ-8)

குருநகர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்களில் முதல் இரண்டு ஷெல்கள் தொடர்மாடிக்கு அப்பால் கடற்கரையோரமாக விழுந்து வெடித்தன. அதனால் மீன் சந்தையில் கூடியிருந்தவர்கள் கலவரமடைந்து பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் ஓடினர். அவ்வேளையில் மூன்றாவது ஷெல் சனக்கூட்டத்துக்கு மத்தியில் விழுந்து வெடித்தது.

தற்காலிகமாக இயங்கிவரும் இந்த மீன் சந்தையில் காலை வேளையில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடுவது வழக்கம். அதுவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமாதலால் பெரும் எண்ணிக்கையானோர் அவ்வேளை அங்கு வந்திருந்தனர்.

ஷெல்லினால் ஒருவர் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. போத்தல் வியாபாரி எனக் கருதப்படும் இவருக்கு 35 வயது இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொது நிறமும் கறுப்புத் தலைமயிரும் கொண்ட இவர் சம்பவம் நடந்த நேரம் கறுப்பு, கபில நிற கோடுகள் கொண்ட வெள்ளை ஷேர்ட்டும் வெள்ளை சாரமும் அணிந்திருந்தார்.

இவருக்கு அருகில் படுகாயமுற்ற நிலையிலிருந்த மூவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் ஒருகாலும் ஒரு கையும் துண்டிக்கப்பட்டு குடல் வெளியேறிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட ஒருவர் அங்கு மரணமானார்.

அளவெட்டியைச் சேர்ந்த மீன் வியாபாரியான முத்து வேதநாயகம் (வயது 55) என அவர் அடையாளம் காணப்பட்டார்.

இச்சம்பவத்தில் ஒரு வீடும் விற்பனைக்காக சந்தையில் வைக்கப்பட்டிருந்த பொருள்களும் சேதமடைந்தன.

சம்பவம் நடந்த காலை வேளையில் அங்கு திரண்டிருந்த மக்கள் முதல் ஷெல் வெடித்ததும் பாதுகாப்புத் தேடி வேறு இடங்களுக்கு ஓடியதால் பெருமளவு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

(உ-5 17-30-51-162)

நாளை

பாஷையூர் புனித அந்தோனியார் கோயிலின் பெருவிழாவை ஒட்டி பாஷையூர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகம் நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7.25 மணி தொடக்கம் கலைவிழா ஒன்றை நடத்தவுள்ளது.

கழகத் தலைவர் திரு. மு. சிங்கராயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இரவு 8 மணிக்கு "தளை அவிழக் காத்திருக்கும் முகைகள்" நாடகமும் இரவு 10.45 மணிக்கு "ஞானசௌந்தரி" எனும்நாட்டுக்கூத்தும், பின் "மானம் காத்த கண்ணன்" இசைநாடகமும் இடம்பெறும்.

போட்டிப் பரீட்சை மூலம்

கணித, விஞ்ஞான பாட பயிலுநர் ஆசிரியர் தெரிவு

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

போட்டிப் பரீட்சை மூலம் விஞ்ஞானம் மற்றும் கணித பயிலுநர் ஆசிரியர்களை நியமிப்பதற்காக கல்விச் சேவைகள் சபை விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 21-7-94 ஆகும்.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், விவசாய விஞ்ஞானம், பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல் தாவரவியல் ஆகிய பாடங்களுள் ஏவையேனும் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்த 18 முதல் 45 வயதுக்கு உட்பட்ட —எவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மாகாண அரசாங்க சேவையில் அல்லது வெற்றிடங்கள் இருக்கும் தேசிய பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்.

நான்கு ஆண்டுகால பயிலுநர் சேவையின் பின் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

போட்டிப்பரீட்சை 25 மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

பயிலுநர் காலத்தில் 2 ஆயிரம் ரூபா பணிக்கொடை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு தெரிவுப் பரீட்சையில் சலுகைப் புள்ளிகள் வழங்கப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அரச அறிவித்தலை யாழ். மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் வேலை நேரங்களில் பார்வையிடலாம். [உ-எ-3]

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

பின்வரும் அரச சேவைகளில் ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன;- (இது பற்றிய அரச அறிவித்தலை யாழ். மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கையில் உள்ள உதயன் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்)

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் சிறுபணி செய்பவர்களை பொது எழுதுநர் II 'ஆ' பிரிவுக்கும், தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கும் நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 27, 28 ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்.

விண்ணப்ப முடிவு திகதி 15-7-1994 ஆகும்.

★ ★ ★

இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் மூன்றாம் வகுப்பிற்கு (பொதுப்பதவி அணி) ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையை 24-9-1994 இல் நடத்தவிருப்பதாக கல்விச் சேவைச்சபை அறிவித்துள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி 21-7-1994 ஆகும்.

★ ★ ★

நாட்டுப் பொருள் வரி (மதுவரி) உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன'

(உ-எ-3-262)

காயமடைந்தோர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கிறிஸ்துராசா செபஸ்டியன் (வயது 24) — தொடர்மாடி, குருநகர்.
★ எஸ். செல்வநாயகம் (வயது 40) — கோப்பாய்.
★ துரைசிங்கம் சண்முகம் (வயது 38) உரும்பராய்.
★ கிறிஸ்துராசா சதீஸ்குமார் (வயது 18) — தொடர்மாடி. குருநகர்.
★ றபட்ரணி (வயது 49) — நாவலர் வீதி.
★ எஸ். [illegible]லிங்கம் (வயது 43) — சண்டிலிப்பாய்.
★ ஆர். மயில்வாகனம் (வயது 52) — கலட்டி லேன், கோண்டாவில்.
★ வி. ஆறுமுகம் (வயது 52) — வட்டுக்கோட்டை.
★ ஐ. செம்பிராஸ் (வயது 25) — 4 ஆம் குறுக்குத்தெரு, குருநகர்.
★ கா. தம்பிராசா (வயது 52) — வட்டுக்கோட்டை.
★ குமாரசுவாமி இராசரெட்ணம் (வயது 49) — நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(உ-51-162)

பாஷாண உத்வாஷணமும் சபிண்டீகரண அழைப்பும்

04-06-94 இல் சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்

சிவஸ்ரீ. சே. பாலசுந்தரக் குருக்கள்

அவர்களின்

நாளை (14-06-94) நடைபெறும் பாஷாண உத்வாஷணத்திலும் சபிண்டீகரண கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பா. விக்னேஸ்வரக் குருக்கள்
பா. அனந்தலிங்கம்

வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடி,
நாயன்மா[illegible]
நல்லூர்.

(இ-8464)

புக்காரா நோட்டம்

குருநகர், ஜூன்13

'புக்காரா' குண்டுவீச்சு விமானமொன்று கடந்த சில தினங்களாக தினமும் மாலை 6.30 மணியளவில் வலிகாமப் பகுதியை வட்டமிட்டு வருகிறது. நேற்றும் இந்த விமானம் வட்டமிட்டது

(உ-51-162)

விநாயகபுரத்தில் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

அம்பாறை மாவட்டத்தில் மூன்று தமிழர்கள் ஸ்ரீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது வீடு ஒன்றையும் படையினர் எரித்தனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை விநாயகபுரம், பாலக்குடா என்னுமிடத்தில் இடம்பெற்றது.

(உ-எ)

பேராசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் ஞாயிற்றுக்கிழமையான நேற்று யாழ் நகரப்பகுதி வழமைக்கு மாறாக வெறிச்சோடிக் காணப்பட்டது.

(உ-5)

வளலாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தான்.

தம்பாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் வசித்துவந்த மனோகரன் சுபந்தன் [வயது 10] என்ற சிறுவனே படுகாயமுற்றான். இச்சிறுவன் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டான்.

நேற்று முன்தினம் இரவும் வளலாய்ப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

[உ- 11-51 155-162]

கொக்குவில் - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலயம்

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

13-6-94	திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
19-6-94	ஞாயிற்றுக்கிழமை கைலாச வாகனம் (அன்று காலை 10.30 மணியளவில் கைலாச வாகன வெள்ளோட்டம் நடைபெறும்)
21-6-94	செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழா
22-6-94	புதன்கிழமை தேர்த் திருவிழா
23-6-94	வியாழக்கிழமை தீர்த்தோற்சவம்
25-6-94	சனிக்கிழமை பூங்காவனம் நடைபெறும்

தினமும் இரவு 7.45 மணி தொடக்கம் 8.45 மணிவரை
தெய்வீக இலக்கியப் பேருரை

மஹாபாரதம்

நிகழ்த்துபவர்:- தமிழருவி திரு. த. சிவகுமாரன்
(காரைநகர் கம்பன் கழகம்)
ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி

(31387) ஆலய பரிபாலன சபை

குருப்ரம்மனே நம

சிவாச்சாரியாபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பவ வருஷம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் இன்று (13-06 1994) திங்கட்கிழமை காலை மணி 9-15க்கு மேல் 10-20ற்குள் வரும் சுப முகூர்த்த வேளையில்

எனது சிரேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

பிரம்மஸ்ரீ த. சரஹணபவானந்த சர்மா

அவர்களுக்கு

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் நல்லாசியுடன்

"சிவாச்சாரிய அபிஷேகம்"

சுவிஸில் நடக்க திருவருள் கூடியுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

தீட்சாகுரு:
சிவஸ்ரீ. பால. ஜெகநாதக்குருக்கள்
(ஸ்ரீலங்கா)
திருமதி தண்டாயுதபாணிக் குருக்கள்
(இலங்கை)

(31380)

பெயர் மாற்றம்

'ஜெயச்சித்ரா நகை மாளிகை'
என்ற பெயரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம்
இன்று முதல

யமுனா நகையகம்

என பெயர் மாற்றம்செய்யப்பட்டுள்ளது
என்பதை
வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்

உரிமையாளர்,
இ. யோகநாதன்.

177D. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம.

(31378)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 19 – 05 – 1940

விண்ணில்: 14 – 06 – 1993

அமரர்

அருளப்பு அகஸ்ரீன் ஞானமணி

(ஊறணி, காங்கேசன்துறை)

எம்மை அன்புடன் வழிநடத்தி வந்த அன்புத் தெய்வமே, யாம் எதிர்பாராத வகையில் எம்மைவிட்டு அகன்று வருடம் ஒன்று கழிந்துவிட்டது. உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இந்நாளில் வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நாளை (14-6-94) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கேற்று அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிநிற்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்

இல. 194, 1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(31385)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.